களையெல்லாம் மாவட்டத்திற்கு மாவட்டம் நகர்த்துவது என்பது கடினமானது, ஆகவே, செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களை முதலில் எடுத்துக்கொண்டு பிறகு ஒவ்வொரு மாவட்டமாக இரண்டு மூன்று ஆண்டுகளில் 374 ஒன்றியங்களிலும் இந்த மைய சமையற் கூடம் வைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும், ஆனல், ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் பல சமையற்கூடங்கள் கட்டுவதற்கு சாமான்கள், மற்றவைகளெல்லாம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்தால்தான், போக்குவரத்தை மிக எளிதாக்கி அவற்றை முடிக்க முடியும் என்று கருதுவதால் 66 மைய சமையற் கூடங்களை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளுகிருர்கள். அதற்கு அடுத்த ஆண்டு அதிகமான மைய சமையற் கூடங்களை எடுத்துக் கொள்ளுவதாகக் கூறுவதால் அந்த நிலைமை வரும்போது திருநெல்வேலியில் சாத்தான்குள ஊராட்சி ஒன்றியமும் கவனிக்கப்படும். அதுவரையில் இப்பொழுதிருக்கும் முயற்சிகள்தான் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளுக்கள் 166, 167, 168 இவைகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Aerial Spraying Schools.

* 169 *Q.*—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to start aerial spraying schools at Coimbatore and Madurai Agricultural Colleges during 1970-71; and

(*b*) if so, the financial implications involved for the proposal ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்லூரியில் மட்டும் விமான மூலம் மருந்து தெளிக்கும் பயிற்சிப்பள்ளி ஒன்றைத் தொடங்குவதற் குரிய செயற்குறிப்பை வேளாண்மைத் துறை இயக்குநர் அனுப்பி யுள்ளார். அது அரசின் பரிசிலனையில் உள்ளது.

(இ) 1970–71 முதல் 4 ஆண்டுகளுக்காகும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

	ரூ.
பணியாளர் சம்பளமும், படிகளும்	6,68,500
தொடர் இன சில்லரைச் செலவுகள்	2,97,400
விமானங்கள் ஹெலிகாப்டர்கள் மற்றும் பிற சாதனங் கள் வாங்குவது தொடர்பான தொடரா இனச் செலவு.	25,35,000
மொத்தம் ..	35,00,900

மேற்படி தொகையில், ரூ. 20 லட்சம் அந்நியச் செலாவணியும் அடங்கும்.